
**அக்டோபர் – 09**

# TNPSC துளிகள்

- அருணாச்சலப் பிரதேச மாநில அரசானது, சாங்லாங் மாவட்டத்தில் உள்ள நம்சிக் நாம்ஃபுக்கில் தனது முதல் வணிக ரீதியான நிலக்கரிச் சுரங்கத்தைத் திறந்து வைத்து ஒரு வரலாற்று மைல்கல்லை எட்டியது.
- உலக வங்கியானது, 2025–26 ஆம் நிதியாண்டிற்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கணிப்பை ஜூன் மாதத்தில் கணிக்கப்பட்ட 6.3 சதவீதத்திலிருந்து 6.5 சதவீதமாக உயர்த்தியதோடு, 2026–27 ஆம் நிதியாண்டிற்கான மதிப்பீட்டை 6.3 சதவீதமாகக் குறைத்தது.
- 2024-25 ஆம் ஆண்டின் இறுதிக்குள் உள்நாட்டு மூலங்களிலிருந்து 1,20,000 கோடி ரூபாய் மதிப்புள்ள இராணுவ வன்பொருள் மற்றும் ஆயுதங்களை இந்தியா வாங்கியுள்ளது.

# தேசியச் செய்திகள்

## PM-SETU திட்டம்




- PM-SETU (திறன் மற்றும் வேலைவாய்ப்பு மூலம் அதிகாரமளிப்பதற்கான பிரதமரின் திட்டம்) புது டெல்லியில் நடைபெற்ற கௌஷல் தீக்ஷாந்த் சமரோ நிகழ்வின் போது தொடங்கப் பட்டது.
- மேம்படுத்தப்பட்ட பயிற்சி உள்கட்டமைப்பு மூலம் உலகளாவிய திறன் சார் தேவைகளுடன் இந்திய இளைஞர்களை இணைப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கம் ஆகும்.
- இந்தத் திட்டமானது அடுத்தப் பத்து ஆண்டுகளில் தொழில்துறை தேவைகளுக்கு ஏற்ப திறன் மேம்பாட்டைச் சீரமைப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது உள்நாட்டு மற்றும் சர்வதேச திறன் தரநிலைகளைப் பூர்த்தி செய்யத் தகுதியான பணியாளர்களை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது.

## முக்கிய கனிமங்களின் மறுசுழற்சி ஊக்குவிப்புத் திட்டம்


- 1,500 கோடி ரூபாய் மதிப்புள்ள முக்கிய கனிமங்களின் மறுசுழற்சி ஊக்குவிப்புத் திட்டத்திற்கான விரிவான வழிகாட்டுதல்களை சுரங்க அமைச்சகம் வெளியிட்டு உள்ளது.
- மின்னணுக் கழிவுகளைப் பயன்படுத்தி தீர்ந்து போன லித்தியம்-அயனி மின் கலன்கள் மற்றும் தொழில்துறைக் குப்பைகள் போன்ற இரண்டாம் நிலை மூலங்களிலிருந்து முக்கிய கனிமங்களை மறுசுழற்சி செய்யும் இந்தியாவின் திறனை அதிகரிப்பதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது, மறுசுழற்சி மையங்களை அமைப்பதில் அல்லது விரிவுபடுத்துவதில் புத்தொழில் நிறுவனங்கள் உட்பட பெரிய மற்றும் சிறிய மறு சுழற்சி மையங்களை ஆதரிக்கிறது.
- இந்த முன்னெடுப்பானது, இந்தியாவின் வள செயல்திறன், சுழற்சிப் பொருளாதார மேம்பாடு மற்றும் மூலோபாய கனிமங்கள் மீதான இறக்குமதி சார்புநிலையைக் குறைத்தல் போன்ற பரந்த இலக்குகளுடன் ஒத்துப் போகிறது.




## மாற்று வழியில் தீர்வு காணும் முறை (ADR)

- 2025 ஆம் ஆண்டின் இந்திய நீதி அறிக்கையானது, அணுகல், தாமதங்கள் மற்றும் பொறுப்புக் கூறல் உட்பட இந்தியாவின் நீதி வழங்கீட்டு அமைப்பில் உள்ள குறிப்பிடத் தக்க சவால்களை எடுத்துரைக்கிறது.
- இந்திய நீதித்துறையில் தற்போது 4.57 கோடிக்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன என்ற நிலையில் இது நீதி வழங்குவதில் குறிப்பிடத்தக்க தாமதத்தை ஏற்படுத்துகிறது.
- மாற்று வழியில் தீர்வு காணும் முறை (ADR) என்பது லோக் அதாலத்கள் மூலம் நடுவர் மன்றம், சமரசம், மத்தியஸ்தம் மற்றும் நீதித்துறை தீர்வு ஆகியவற்றை உள்ளடக்கியது.
- இந்திய அரசியலமைப்பின் 39A சரத்து ஆனது, சம நீதி மற்றும் இலவச சட்ட உதவியை கட்டாயமாக்குவதன் மூலம், ADR முறைக்கான அரசியலமைப்பு அடிப்படையை வழங்குகிறது.
- 1908 ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் 89வது பிரிவானது, உரிமையியல் தகராறுகளைத் தீர்ப்பதற்காக ADR செயல்முறைகளைப் பயன்படுத்துவதை அங்கீகரித்து ஆதரிக்கிறது.

- 2021 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட நடுவர் மன்றம் மற்றும் சமரசச் சட்டம், 1996 ஆனது, அதிகபட்சமாக 180 நாட்களுக்குள் தகராறுகளைத் தீர்க்க வேண்டும் என்று கோருகிறது.
- 1987 ஆம் ஆண்டு சட்ட சேவைகள் ஆணையங்கள் சட்டத்தினால் நிர்வகிக்கப்படும் லோக் அதாலத்கள், மேல்முறையீடு செய்வதற்கான எந்த விருப்பத் தேர்வும் இன்றி இறுதியான மற்றும் பிணைக்கப்பட்ட முடிவுகளை வழங்குகின்றன.
- ஆந்திரப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் மற்றும் பீகார் போன்ற மாநிலங்களில் அதிக எண்ணிக்கையிலான வழக்குகள் நிலுவையில் உள்ளன.




# சர்வதேசச் செய்திகள்

## 68வது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாடு




- 68வது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாடு (CPC) ஆனது பார்படோஸின் பிரிட்ஜ் டவுனில் தொடங்கியது.
- இந்த நிகழ்வினை 1911 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட காமன்வெல்த் பாராளுமன்றச் சங்கம் (CPA) ஏற்பாடு செய்துள்ளது.
- இந்த மாநாடு ஆனது சட்டமியற்றுக் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதிலும் உலகளாவிய ஆளுகைச் சவால்களை எதிர்கொள்வதிலும் கவனம் செலுத்துகிறது.
- பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து

கொள்வதற்காகவும், ஜனநாயக மதிப்புகளை ஊக்குவிப்பதற்காகவும், பொதுவான சவால்களை எதிர்கொள்வதற்காகவும் CPC ஒரு தளமாக செயல்படுகிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## வைப்புத் தொகை குறியாக்கம்

- இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஆனது வைப்புத் தொகை குறியாக்கம் குறித்த ஒரு சோதனைத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- வைப்புத் தொகை குறியாக்கம் என்பது வங்கிகளில் வைத்திருக்கும் வைப்புத் தொகைகளை அனைத்து அமைப்புகளிலும் பயன்படுத்தப்படக் கூடிய, மாற்றப்படக் கூடிய அல்லது மிகவும் சீரான முறையில் தீர்க்கப்படக் கூடிய வகையில் குறியீடு கொண்டு குறிப்பிடுவதாகும்.
- ஒரு வாடிக்கையாளர் தங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட சொத்தை நம்பகமான காப்பு வங்கியிடம் வைப்பு வைக்கும் போது இந்த செயல்முறை தொடங்குகிறது.
- அதற்கு ஈடாக, காப்பு வங்கி ஒரு தொடர் சங்கிலித் தொழில்நுட்ப வலையமைப்பில் அதற்கு ஈடான மதிப்பிலான டிஜிட்டல் குறியீடுகளை வழங்குகிறது.
- டிஜிட்டல் குறியாக்கம் என்பது வைப்புத் தொகை, பங்குகள் மற்றும் பத்திரங்கள் போன்ற சொத்துக்களை தொடர் சங்கிலி அமைப்பில் பதிவு செய்யப்பட்ட டிஜிட்டல் வடிவங்களாக மாற்றும் செயல்முறையைக் குறிக்கிறது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## பவளப்பாறை லார்வாக்களுக்கான கிரையோ வங்கி

- பிலிப்பைன்ஸ் நாடானது, தென்கிழக்கு ஆசியாவின் முதல் பவளப்பாறை லார்வா கருவங்கி (கிரையோ பேங்க்) ஒன்றை அமைத்துள்ளது.
- இது பவளப்பாறை முக்கோணப் பகுதியில் கடல்சார் பல்லுயிரியலை மீட்டெடுக்கவும் பாதுகாக்கவும் உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மையமானது, -196°C வெப்பநிலையில் பவளப்பாறை லார்வாக்களை வெப்பவழி கண்ணாடியாக்கம் (விட்ரிஃபிகேஷன்) எனப்படும் செயல்முறையைப் பயன்படுத்தி

பாதுகாக்கும்.

❖ பாதுகாக்கப்பட்ட லார்வாக்களை பவளப்பாறை மறுசீரமைப்பு அல்லது ஆராய்ச்சிக்காக புதுப்பிக்க முடியும் என்பதோடு இது பவளப்பாறையின் மரபணு பன்முகத் தன்மையின் நீண்டகாலப் பாதுகாப்பை உறுதி செய்கிறது.

❖ கிரையோபேங்க் பிலிப்பைன்ஸ், தைவான், இந்தோனேசியா, மலேசியா மற்றும் தாய்லாந்து ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு பிராந்திய வலையமைப்பின் ஒரு பகுதி ஆகும்.

❖ போசிலோபோரா, அக்ரோபோரா மற்றும் கேலக்ஸியா போன்ற பவளப்பாறை இனங்கள் ஆனது பரந்த வளங்காப்பு முயற்சிகளுக்காக உகந்த உறைபனி நெறிமுறைகளை உருவாக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

❖ அவசர பருவநிலை நடவடிக்கை எடுக்கப்படா விட்டால் 2050 ஆம் ஆண்டிற்குள் 90% வரையிலான உயிருள்ள பவளப் பாறைகள் இழக்கப் படலாம் என்று அறிவியலாளர்கள் எச்சரிப்பதுடன், கடல் வளங்காப்பிற்கு இது போன்ற கிரையோ வங்கிகள் முக்கியமானவையாகும்.




## அருகி வரும் உயிரினங்களின் செந்நிறப் பட்டியல்

❖ IUCN அமைப்பின் (சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியம்) 2025 ஆம் ஆண்டு உலக பாதுகாப்பு மாநாட்டில் இந்தியா தனது முதல் அருகி வரும் உயிரினங்களின் செந்நிறப் பட்டியலை வெளியிட்டது.

❖ இந்தியாவின் செந்நிறப் பட்டியல் ஆனது, உலகளாவிய வளங்காப்புத் தர நிலைகளுடன் ஒன்றி, அதன் எல்லைக்குள் அச்சுறுத்தலுக்கு உள்ளான உயிரினங்களை ஆவணப்படுத்துகின்றது.

❖ இந்த மாநாடு ஆனது ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபியில் நடைபெற்றது.


❖ இந்தியா 1969 ஆம் ஆண்டு முதல் IUCN ஒன்றியத்தின் உறுப்பினர் நாடாக உள்ளது.

❖ நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் IUCN மாநாடு ஆனது, உலகளாவிய வளங்காப்பு முன்னுரிமைகள் குறித்து வாக்களிப்பதற்காக 1,400க்கும் மேற்பட்ட உறுப்பினர் அமைப்புகளை ஒன்றிணைத்தது.

❖ இந்த மாநாடானது இதற்கு முன்னதாக 2021 ஆம் ஆண்டில் பிரான்சின் மார்சேயில் நடைபெற்றது.

❖ 2025 ஆம் ஆண்டு மாநாடானது, மீள்தன்மை மிக்க வளங்காப்பு நடவடிக்கை, பருவ

நிலை இடர் குறைப்பு, சம பங்கீடு, இயற்கைக்கு உகந்த பொருளாதாரப் பிரிவுகள் மற்றும் வளங்காப்பு சார் புத்தாக்கம் ஆகிய ஐந்து கருத்துக்களில் கவனம் செலுத்தியது.




## மாநிலச் செய்திகள்

### பீகார் சட்டமன்றத் தேர்தல் 2025




- பீகார் மாநிலத்தில் நவம்பர் 06 மற்றும் 11 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெறும் என்பதோடு அதற்கான முடிவுகள் நவம்பர் 14 ஆம் தேதியன்று அறிவிக்கப் படும்.
- தேர்தல் ஆணையம் ஆனது, 17 புதிய சீர்திருத்தங்களை முதலில் பீகாரிலும், பின்னர் நாடு தழுவிய அளவிலும் செயல்படுத்தியுள்ளது.
- வாக்காளர் வரம்பானது, ஒரு வாக்குச்சாவடிக்கு 1,500 வாக்காளர்கள் என்ற முந்தைய

வரம்பில் இருந்து 1,200 வாக்காளர்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

- வேட்பாளர் வாக்குச்சாவடிகள் ஆனது, தேர்தல் நாளில் வாக்குச்சாவடிகளில் இருந்து 100 மீட்டர் சுற்றளவுக்கு வெளியே மட்டுமே அனுமதிக்கப்படும்.
- வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்காக அனைத்து வாக்குச்சாவடிகளிலும் 100 சதவீத இணையதள ஒளிபரப்பு பரவல் நடவடிக்கை செயல்படுத்தப்படும்.
- வேட்பாளர்களின் வண்ணப் புகைப்படங்கள் மற்றும் பெரிய அளவிலான வரிசை எண்களைச் சேர்ப்பதற்காக மின்னணு வாக்குப்பதிவு இயந்திர வாக்குச்சீட்டு வழி காட்டுதல்களில் திருத்தம் மேற்கொள்ளப்படும்.
- படிவம் 17C மற்றும் EVM முடிவுகளுக்கு இடையில் முரண்பாடுகள் இருந்தால், வாக்காளர் சரிபார்ப்பு காகித தணிக்கை (VVPAT) சீட்டுகளை கட்டாயமாக எண்ணுதல் மற்றும் சரிபார்த்தல் அமல்படுத்தப்படும்.

## இந்தியாவின் முதல் கூட்டுறவு பல்-உள்ளீடு கொண்ட CBG

- இந்தியாவின் முதல் கூட்டுறவு பல்-உள்ளீடு கொண்ட அழுத்தப்பட்ட உயிரி எரிவாயு (CBG) ஆலையானது, மகாராஷ்டிராவின் அஹில்யாநகரில் உள்ள கோபர்கானில் திறக்கப் பட்டது.
- இந்த ஆலையானது, மகரிஷி சங்கர்ராவ் கோல்ஹே சஹாகரி சாகார் கர்கானாவில் அமைக்கப்பட்டுள்ளது.
- இது இந்தியாவின் கூட்டுறவு சர்க்கரைத் துறைக்கு முதலாவது ஆலையாகக் குறிக்கப் பட்டுள்ளது என்பதோடு மேலும் இது தேசியக் கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தினால் (NCDC) ஆதரிக்கப்பட்டதாகும்.





## மாஜே கர் யோஜனா – கோவா



- கோவா மாநில அரசானது, அதன் முதன்மை நலத்திட்டமான 'மாஜே கர்' யோஜனா என்ற திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- இது அரசு மற்றும் சமூக நிலங்களில் கட்டமைக்கப்பட்ட வீடுகளை முறைப்படுத்துவதையும் அங்கு நீண்டகாலமாக வசிப்பவர்களுக்கு உரிமம் சார் உரிமைகளை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது கோவா மாநில நில வருவாய் சட்டம், கோவா மாநில அரசின் அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களை முறைப்படுத்துதல் சட்டம் மற்றும் வன உரிமைகள் சட்டம் ஆகியவற்றில் உள்ள முறைகேடுகளை நிவர்த்தி செய்யும்.

### UPI பரிவர்த்தனைகளின் செறிவு




- தெலுங்கானா மாநிலமானது, அனைத்து இந்திய மாநிலங்களிலும் அதிக தனிநபர் ஒருங்கிணைந்த பண வழங்கீட்டு இடைமுகம் (UPI) சார்ந்த பரிவர்த்தனை செறிவினைக் கொண்டுள்ளது.
- கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், டெல்லி மற்றும் மகாராஷ்டிரா ஆகியவற்றில் நகர்ப்புற மையங்கள் மற்றும் பொருளாதார மையங்களால் இயக்கப்படும் அதிக UPI பயன்பாட்டுச் செறிவுகள் பதிவாகியுள்ளன.
- பணத் தேவையில் ஏற்பட்ட குறைவுடன் தொடர்புடைய UPI பயன்பாட்டின் அதிகரிப்பு ஆனது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு குறிப்பிட்ட சதவீதமாக ATM பணம் எடுத்தல் நடவடிக்கையில் நிலையான வீழ்ச்சியால் குறிப்பிடப்பட்டுள்ளது.
- 2024–25 ஆம் ஆண்டில் புழக்கத்தில் உள்ள பண மதிப்பு (CIC) ஆனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 11.2 சதவீத பங்கைக் கொண்டிருந்தது.
- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் முதல் முறையாக UPI பரிவர்த்தனை 20 பில்லியனைத் தாண்டியது.
- அளவு சார்ந்து 80% பரிவர்த்தனைகளுடன் UPI பயன்பாடு ஆனது 10 மாநிலங்களில் அதிகமாக உள்ளது.
- தெலுங்கானா, ஆந்திரப் பிரதேசம், டெல்லி மற்றும் மகாராஷ்டிராவில் பயன்பாட்டுச் செறிவு அதிகமாக உள்ளது.


## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### வேதியியலுக்கான நோபல் பரிசு 2025

- "உலோக-கரிம கட்டமைப்புகளின் உருவாக்கத்திற்காக "சுசுமு கிடகாவா, ரிச்சர்ட்

ராப்சன் மற்றும் ஒமர் M. யாகி ஆகியோருக்கு 2025 ஆம் ஆண்டின் வேதியியலுக்கான நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

- வாயுக்கள் மற்றும் பிற இரசாயனங்கள் ஊடுருவக்கூடிய/பாயக்கூடிய பெரிய இடைவெளிகளைக் கொண்ட மூலக்கூறு கட்டமைப்புகளை அவர்கள் உருவாக்கியுள்ளனர்.
- இந்த உலோக-கரிம கட்டமைப்புகளை, பாலைவனக் காற்றிலிருந்து தண்ணீரைப் பெறுவதற்கும், கார்பன் டை ஆக்சைடைப் பிடிக்கவும், நச்சு வாயுக்களை சேமிக்கவும் அல்லது வேதியியல் எதிர்வினைகளில் வினையூக்கப் பொருளாகவும் பயன்படுத்தலாம்.




# விளையாட்டுச் செய்திகள்

## BWF உலக ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டி 2025




- BWF (பேட்மிண்டன் உலக கூட்டமைப்பு) உலக ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டியானது 17 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவில் மீண்டும் கௌஹாத்தியில் (அசாம்) நடைபெறுகிறது.
- இந்தப் போட்டியில் சுஹந்தினாட்டா கோப்பை (கலப்பு அணி போட்டி) மற்றும் ஒவ்வொரு ஆட்டத்திற்குமான ஸ்கோர்/மதிப்பு வழங்கல் எனும் Eye-Level கோப்பை

(தனி நபர் போட்டிகள்) என இரண்டு பிரிவுகள் உள்ளன.

- இந்தியா இதற்கு முன்னதாக, இப்போட்டியில் 11 தனிநபர் பதக்கங்களை வென்றுள்ளது மற்றும் கடைசியாக 2008 ஆம் ஆண்டில் புனேவில் இப்போட்டியினை நடத்தியது.
- 2025 ஆம் ஆண்டு போட்டியை நடத்துவதுடன், இந்த சாம்பியன்ஷிப் போட்டியினை இரண்டு முறை நடத்திய நான்காவது ஆசிய நாடாக இந்தியா மாற உள்ளது.

## மாற்றுத் திறனாளிகளுக்கான உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டி 2025

- மாற்றுத் திறனாளிகளுக்கான 2025 ஆம் ஆண்டு உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியானது புது டெல்லியில் நிறைவடைந்தது.
- இந்தியா முதன்முறையாக இந்தப் போட்டியை நடத்தியதோடு மேலும் இந்திய அணி 6 தங்கம், 9 வெள்ளி மற்றும் 7 வெண்கலம் உட்பட 22 பதக்கங்களை இதில் வென்றது.
- இந்தப் போட்டியானது, முன்னதாக 2010 ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் போது மாற்றுத் திறனாளிகளுக்கான தடகளப் போட்டிகள் நடத்தப்பட்ட ஜவஹர்லால் நேரு அரங்கத்தில் நடைபெற்றது.
- கத்தார், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்குப் பிறகு மாற்றுத் திறனாளிகளுக்கான உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியினை நடத்திய நான்காவது ஆசிய நாடாக இந்தியா மாறியது.
- 2004 ஆம் ஆண்டில் ஏதென்ஸ் நகரில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டிகளில் 2 ஆக இருந்த இந்தியாவின் பதக்க எண்ணிக்கையானது 2024 ஆம் ஆண்டு பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளில் 29 ஆக உயர்ந்துள்ளது.

**India at WAPC 2025!**

**RANK 10 | 22 MEDALS**

MEDAL TALLY

| RANK | COUNTRY | GOLD | SILVER | BRONZE | TOT |
|---|---|---|---|---|---|
| 1 | BRA | 15 | 20 | 9 | 44 |
| 2 | CHN | 13 | 22 | 17 | 52 |
| 3 | IRN | 9 | 2 | 5 | 16 |
| 4 | NED | 8 | 3 | 1 | 12 |
| 5 | POL | 8 | 2 | 6 | 16 |
| 10 | IND | 6 | 9 | 7 | 22 |

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★